பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: கார்த்திகை 3 (19—11—71) வெள்ளி   வெளியூர்: கார்த்திகை 4 (20—11—71) சனி [இதழ்: 131

டாக்காவில் 'மனித வேட்டை'

திடுக்கிடும் தகவல்

முஜிப்நகர், நவ. 19—

" டாக்காவில் நேற்று இராணுவ ஆட்சியினர் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்திருந்தபோது, சுமார் 1,000 மக்கள் கொல்லப்பட்டார்கள்—பல ஆயிரக்கணக்கான மக்கள் கைது செய்யப்பட்டார்கள் "

(4-ம் பக்கம் பார்க்க)

அவசரச் சட்டத்திலிருந்து தொழிற்சாலைகள் தப்ப முடியாது

மூடப்பட்ட நிறுவனங்களைத் திறக்க நடவடிக்கை

நாடு முழுவதற்கும் பொருந்தும் கிராசுட்டி சட்டம் வருகிறது— நாடாளுமன்றத்தில் அமைச்சர் ஆர். கே. காடில்கார் தகவல்

புதுடில்லி நவ. 19—

"கிராசுடி குறித்து மசோதா ஒன்றைக் கொண்டுவர அரசு எண்ணியிருக்கிறது; இம்மசோதா நாடு முழுவதற்கும் பொருந்தக்கூடியதாக இருக்கும்; மேற்கு வங்க அவசரச் சட்ட மாதிரியில் இம்மசோதா இருக்கும்'

என்று மக்களவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கே. ஆர். காடில்கார் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

''எல்லா மட்டங்களிலும் நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கு கொள்வது சம்பந்தப்பட்ட வரையில், அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்த விரும்புகிறது; ஆனால், சில தொழிற்சங்கத் தலைவர்கள் இத்தகைய திட்டங்களில் போதுமான அக்கறை காட்டாதது நாம் அனுபவத்தில் கண்ட நிலையாகும்.

"தொழிற்சாலைகளை மூடுவது தொடர்பாக அண்மையில் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்திலிருந்து தப்புமொருட்டுச் சில தொழில் நிறுவனங்கள் கதவடைப்பில் ஈடுபடுகின்றன.

"அவசரச் சட்டத்தைத் தொடர்ந்து பல மாநில அரசுகள் மூடப்பட்ட தொழில் நிறுவனங்களில் சிலவற்றை மீண்டும் திறக்க நடவடிக்கைகள் எடுக்கத் தொடங்கியிருக்கின்றன.

"தொழில் நிறுவனங்களை மூடுவதற்கு 60 நாள் முன்னறிவிப்புத் தர வேண்டும் எனக் கெடு நிர்ணயித்துத் திருத்த மசோதா ஒன்று நடப்புக் கூட்டத் தொடரில் வரவிருக்கிறது.''

சென்னை நகரை அழகுபடுத்தும் திட்டம்

தமிழக அரசின் கோரிக்கை— மத்திய அமைச்சர் தகவல்

புதுடில்லி, நவ. 19—

சென்னை நகரை அழகுபடுத்தத் திட்டமிடப்பட்டிருப்பது பற்றி நாடாளுமன்ற மேலவையில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், திட்டத்துறை இணையமைச்சர் மோகன் தாரியா அளித்த பதிலாவது:—

"20 ஆண்டுகளில் ரூ. 185 கோடி செலவில் சென்னை நகரை அழகுபடுத்தத் தமிழக அரசு திட்டமிட்டு—அதனை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது.

"இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசிடம் தமிழக அரசு நிதியுதவி கேட்டிருக்கிறது."

வெடிச் சாதனங்களைக் கடத்திவந்த லாரி பிடிபட்டது

பெங்களூர், நவ. 19—

பெங்களூர் அருகில மடிவாலா என்ற இடத்தில் பெங்களூர் போலீசார் ஒரு லாரியை மடக்கி சோதனையிட்டபோது 21மூட்டை வெடிச் சாதனங்களைக் கைப்பற்றினர்.

இவற்றின் மதிப்பு ரூ. 10,000 இருக்கும் என்று கூறப்படுகிறது.

பெங்களூரிலிருந்து இவை சென்னைக்குக கடத்திவரப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

பாகிஸ்தான் அரக்கத்தனம்

குடியரசுத் தலைவர் வி. வி. கிரி கடும் எச்சரிக்கை

கல்கத்தா, நவ. 19—

" அரக்கத்தனமான கொள்கையினால் பல இலட்சக்கணக்கான மக்களை விரட்டியபின், பாகிஸ்தான் இராணுவ ஆட்சியினர் போர் மிரட்டலில் ஈடுபட்டுள்ளனர்.

" இந்தியா—பாகிஸ்தான் எல்லை நெடுகிலும் தனது இராணுவத்தைப் பாகிஸ்தான் குவித்திருக்கிறது.

" நாம் நமது பொறுமையின் எல்லைக்கு வந்துவிட்டோம்; 99 இலட்சத்திற்கும் அதிகமான அகதிகள் நம் நாட்டில் குவிந்திருப்பதால், நமது பொருளாதாரச் சுமை பன்மடங்கு பெருகியிருக்கிறது; ஆகவே, நமது பொருளாதார நிலையான தன்மைக்கு அபாயம் ஏற்பட்டிருக்கிறது; அகதிகளுக்காக இந்திய அரசு நாள்தோறும் ரூ. 2 கோடி செலவிடுகிறது "

என்று குடியரசுத் தலைவர் வி.வி. கிரி அவர்கள் கல்கத்தா வானொலி நிலையத்தில் ஆற்றிய உரையில் சுட்டிக்காட்டித் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எத்தகைய அபாயம் வந்தாலும் அதனைச் சமாளிக்க இந்தியா முழு அளவில் தயாராக இருக்கிறது.

நமது போர் வீரர்கள் எந்த நிலைமைக்கும் ஆயத்தமாக உள்ளனர்; ஆக்கிரமிப்பாளருக்குச் சரியான பதிலடி கொடுப்பர்.''

திரிபுரா எல்லையில் பாகிஸ்தான் விஷமம்

கிராம மக்கள் பாதுகாப்பான இடங்கட்கு வெளியேற்றம்

அகர்தாலா, நவ. 19—

திரிபுராவின் எல்லைப் பகுதியிலுள்ள 100 கிராமங்களிலிருந்து பாகிஸ்தான் தொடர்ந்து சுட்டுவருவதன் காரணமாக சுமார் 20,000 பேர் வெளியேற்றப்பட்டிருக்கின்றனர்.

இப்பகுதியில் சுமார் 1,37 000 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

வெளியேற்றப்பட்டவர்களுக்காக மாநில அரசு 4 முகாம்களை அமைத்திருக்கிறது.

சுமார் 1,500 குடும்பங்கட்கு அரசு இலவச உணவு அளித்துவருகிறது.

சீனு நடத்திய அணுச் சோதனை

வாஷிங்டன், நவ. 19—

சீனு நேற்று அணு வெடிச் சோதனை ஒன்றை வானவெளியில் நடத்தியதாக அமெரிக்க அணு சக்திக் கமிஷன் அறிவித்தது.

தமிழில் மணியார்டர் பாரம்

எல்லா வட்டார மொழிகளிலும் அச்சடிப்பதற்கு ஏற்பாடு

புதுடில்லி, நவ. 19—

தமிழ்நாட்டில் இனிமேல் தமிழில் மணியார்டர் பாரங்களை அச்சிட்டு வழங்க மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

இதுபோல், எல்லாக் கிராம அஞ்சல் நிலையங்களிலும் அந்தந்த வட்டார மொழிகளில் மணியார்டர் பாரங்களைப் பயன்படுத்த வசதி செய்யப்படும்.

மணியார்டர் பாரம் மட்டுமல்லாது வேறு சில பாரங்களும் இதுபோல் தனித்தனி மொழிகளில் அச்சடிக்கப்படும்.

மாநிலத்திற்கு மாநிலம் செல்லக்கூடிய இப்படிப்பட்ட பாரங்கள் ஆங்கிலம்—இந்தி—வட்டார மொழி ஆகிய மும்மொழிகளில் அச்சடிக்கப்படுவதால் அவை அளவில் மிகப் பெரிதாக இருக்கிறது; ஆகையால் இவைகள் தனித் தனியாக அச்சடிக்கப்படும்.

இத்தகவலை, நாடாளுமன்ற மேலவையில், அஞ்சல்—தந்தி இணை அமைச்சர் என்.என். பகுகுணா தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்குத் துருக்கியிலும் மூக்குடைப்பு

ஆயுத உதவி செய்ய இயலாது எனக் கைவிரிப்பு

அன்காரா, நவ. 19—

இராணுவ ஆயுதங்களுக்காகத் தேடி அலைந்துகொண்டிருக்கும் பாகிஸ்தான் துருக்கியிடமும் ஆயுத உதவி கேட்டதாம்.

ஆனால் துருக்கி இந்தக் கோரிக்கையை நிராகரித்துவிட்டதாம். தங்களுக்குக் கிடைக்கும் ஆயுதங்கள் தங்கள் இராணுவத் தேவைக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும் என்று துருக்கி கூறியதாம்.

மேலும், கிழக்கு வங்கப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காண வேண்டுமென்றகோரிக்கையைத் துருக்கி ஆதரிப்பதாகவும் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தமிழில் படித்தவர்கட்கே முதலிடம்

போலீசு இன்ஸ்பெக்டர்கள் நியமன விதியில் திருத்தம்

சென்னை, நவ. 19—

போலீசு சப்-இன்ஸ்பெக்டர் வேலைக்குத் தமிழில் படித்துப் பட்டம் பெற்றவர்களைத் தேர்ந்தெடுக்கத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

இதுவரை இதற்குரிய தகுதிகளுக்கான விதிகளில், 'சென்னை—அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்கள்' என்று இருந்ததை, 'சென்னை—அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழில் படித்து பட்டம் பெற்றவர்கள்' என்று அரசு திருத்தியிருக்கிறது.

ஆயினும் தமிழில் படித்தும் பட்டம் பெற்றவர்கள் போதிய அளவுக்குக் கிடைக்கவில்லையென்றால், ஆங்கில மொழி மூலம் படித்துப் பட்டம் பெற்றவர்கள் மனுக்களையும் பரிசீலிக்கலாம் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஜெயப்பிரகாசரின் அரசியல் துறவு

பீகார், நவ. 19—

அரசியலிலிருந்தும் சமூகப் பணிகளிலிருந்தும் சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் ஓராண்டுக்கு முழு அளவில் ஓய்வு பெறுவார்.

முசாபர்பூரிலிருந்து கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் இதை அவர் அறிவித்திருக்கிறார்.

அகதிகள் சொத்துக்குப் பாதுகாப்பு

"கிழக்கு வங்க அகதிகளின் வீடுகளையும்—நிலங்களையும் பறிமுதல் செய்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை, மீண்டும் அவர்கள் கிழக்கு வங்கத்துக்குத் திரும்பாதவாறு தடுக்கக்கூடும்; இத்தகைய நடவடிக்கையை இந்திய அரசு ஏற்காது "

என்று மக்களவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் வெளிவிவகாரத் துணையமைச்சர் சுரேந்திர பால் சிங் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

" அகதிகளின் சொத்துக்கள் பாதுகாக்கப்படும்—கிழக்கு வங்கத்துக்குத் திரும்பியதும் அவர்களிடம் திருப்பித் தரப்படும்—என்று பாகிஸ்தானிடமிருந்து உறுதிமொழி பெறப்பட்டிருக்கிறது."

நாட்டுடைமையாகும் பஸ் போக்குவரத்துக்களை நிர்வகிப்பதற்குத் தனிக் கார்ப்பரேஷன்கள் ஏற்படும்

[✶]

பஸ் நிறுவனங்களுக்கு நட்ட ஈடு வழங்கும் பிரச்சினை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குக் குழு அமைப்பு

தமிழக அரசின் திட்டம் — அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் விளக்கம்

சென்னை, நவ. 19—

"தமிழ்நாட்டில் அரசாங்கப் பஸ் போக்குவரத்தை நடத்துவதற்காக மொத்தம் 7 பஸ் கார்ப்பரேஷன்கள் அமைக்கப்படும்.

"அரசாங்க எக்ஸ்பிரஸ் பஸ்களைப் பொறுத்தவரையில் அவை இப்போது இருப்பதுபோல் அரசாங்கப் பஸ் போக்குவரத்துத் துறையின் நிர்வாகத்தின்கீழ் செயல்பட்டு வரும்"

என்று, போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் தந்த விளக்கங்களாவன :—

பல்லவா போக்குவரத்துக் கார்ப்பரேஷன்

1. சென்னை, சென்னையை அடுத்துள்ள புறநகர்ப் பகுதிகள் — செங்கற்பட்டு ஆகிய இடங்களில் ஓடும் அரசாங்கப் பஸ்கள் நிர்வாகத்திற்காகத் தனிக் கார்ப்பரேஷன் ஏற்படுத்தப்படும்; இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் இந்தக் கார்ப்பரேஷனுக்குப் 'பல்லவா போக்குவரத்துக் கார்ப்பரேஷன்' என்று பெயரிடப்படும்; ரூ 10 கோடி முதலீட்டுடன் துவக்கப்படும் இந்தக் கார்ப்பரேஷனின நிர்வாகத்தின்கீழ் 1 382 பஸ்கள் இருக்கும்; சுமார் 72,000 தொழிலாளர்கள் பணியாற்றுவார்கள்.

இந்தக் கார்ப்பரேஷனின் தலைவராகத் தமிழக அரசுப் போக்குவரத்துத் துறைச் செயலாளர் எம். எஸ். ராம் நியமிக்கப்பட்டிருக்கிறார்; தமிழக அரசுப் பஸ் போக்குவரத்துத் துறை இயக்குநராகப் பதவிவகிக்கும் கே. ஜே. எம். ஷெட்டி, இக்கார்ப்பரேஷனின் நிர்வாக இயக்குநராக நியமனம் ஆகியிருக்கிறார்; அரசாங்க நிதித் துறைச் செயலாளர் எஸ். வெங்கட்டரமணன், மின்வாரியத் தலைவர் சி. ஜி. ரெங்கசாஷ்யம், தொழில் நுணுக்கக் கல்வி இயக்குநர் பி. சிவலிங்கம், போக்குவரத்துத் துறை தனி அதிகாரி சைரியாக், தொழில் நுணுக்க ஆசிரியர்கள் பயிற்சி நிலைய முதல்வர் ஏ. பி. ஜம்புலிங்கம் ஆகிய அதிகாரிகள், பல்லவா பஸ் போக்குவரத்துக் கார்ப்பரேஷனின் இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்; இதன் தலைமையகம் சென்னையில் இருக்கும்.

பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கார்ப்பரேஷன்

2. பஸ் தேசியமயத் திட்டத்தின்கீழ் மதுரையில் மேற்கொள்ளப்பட்ட டி. வி. எஸ். நிறுவனத்தின் பஸ்களை நிர்வகிப்பதற்காக, 'பாண்டியன் சாலை போக்குவரத்துக் கார்ப்பரேஷன்' என்ற பெயரில் ரூ. 5 கோடி மூலதனத்துடன் தொடங்கப்படுகிறது; இதன் நிர்வாக போர்டு தலைவராக அரசாங்கப் பஸ் போக்குவரத்துத்துறை செயலாளர் எம். எஸ். ராம் இருப்பார்; பி. சி சைரியாக், அரசாங்கக் கல்வித்துறை செயலாளர் கே. திரவியம், நிதித்துறை கூட்டுச் செயலாளர் கே. வெங்கடேசன், மதுரை மாநகராட்சி கமிஷனர் பி. வி. இராசாராம் ஆகிய அதிகாரிகள், 'பாண்டியன் சாலைப் போக்குவரத்து கார்ப்பரேஷன்' இயக்குநர்களாக நியமனம் ஆகியுள்ளனர்.

மதுரை நகரில் துவங்கப்படும் இந்தப் பஸ் கார்ப்பரேஷன் நிர்வாகத்தின்கீழ் 352 பஸ்கள் வரும்; சுமார் 2,000 தொழிலாளர்களும — சிப்பந்திகளும் பணியாற்றுவார்கள்.

நலன்களை இலட்சியமாகக் கொண்டு இயங்கும்

இந்த இரண்டு பஸ் போக்குவரத்துக் கார்ப்பரேஷன்களும் அடுத்த ஆண்டு (1972) சனவரி மாதம் முதல் செயல்படத் துவங்கும்; இயக்குநர்களாக நியமனம் ஆனவர்கள் மூன்றுண்டுக் காலததிற்குப் பதவி வகிப்பார்கள்.

திறமையான நிர்வாகம் — சீரான பராமரிப்பு — பயணிகள் வசதி — தொழிலாளர்கள் நலன் ஆகியவற்றை இலட்சியமாகக்கொண்டு உடனடியாக இந்த இரண்டு பஸ் போக்குவரத்துக் கார்ப்பரேஷன்களும் அமைக்கப்படுகின்றன.

தஞ்சை — கோவையில் இரு கார்ப்பரேஷன்கள்

3. இவை தவிர, பஸ் தேசியமயத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆனைமலை பஸ் டிரான்ஸ்போர்ட் (கோவை), ராமன் அண்ட் ராமன், எஸ். ஆர். வி. எஸ். சக்தி விலாஸ் (தஞ்சை மாவட்டம்) ஆகிய பஸ் நிறுவனங்களை மேற்கொள்வதற்காகத் தஞ்சையிலும், கோவையிலும், தனித் தனியாக இரு கார்ப்பரேஷன்கள் அமைக்கப்படும்; இவை அமைக்கும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

குமரி, ஆற்காடு, சேலம் — தர்மபுரி கார்ப்பரேஷன்கள்

மேலும் — கன்னியாகுமரி, சேலம் — தர்மபுரி, ஆற்காடு ஆகிய இடங்களுக்கான அரசாங்க பஸ்களுக்காகத் தனியாக மொத்தம் மூன்று கார்ப்பரேஷன்கள் ஏற்படுத்தப்படும்; ஆகமொத்தம் ஏழு பஸ் கார்ப்பரேஷன்கள் தமிழகத்தில் அமைக்கப்படும்.

நட்டம் ஏற்படாமல் தடுக்க வழிகோலப்படும்

பஸ் போக்குவரத்தைத் திறமையாகவும் — இலாபகரமாகவும் நடத்தும் இலட்சியத்துடன் இந்தக் கார்ப்பரேஷன்கள் பணியாற்றும்.

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இந்தப் பஸ் கார்ப்பரேஷன்கள் தங்களுடைய இலாப — நட்டக் கணக்கை அரசுக்கு அளிக்க வேண்டும்.

இதன் மூலம், தொடர்ந்து நட்டம் ஏற்படாமல் தடுக்கவும் — இலாபம் சம்பாதிக்க வழிவகைகள் காணவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்."

நிர்வாகப் போர்டில் தொழிலாளர் பிரதிநிதிகள் ?

"நிர்வாகப் போர்டில் தொழிலாளர்கள் பிரதிநிதிகளுக்கு இடமளிக்கப்படுமா ?" என்று கேட்டதற்கு, 'கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டுச் செயல்படத் துவங்கியவுடன் இதுபற்றி முடிவு செய்யப்படும்" என்று அமைச்சர் சொன்னார்.

நட்ட ஈட்டுப் பிரச்சினை

தேசியமயத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பஸ் நிறுவனங்களுக்கு நட்டஈடு வழங்கும் பிரச்சினை குறித்துப் பேசி முடிவு செய்வதற்காகத் தமிழக அரசு மூன்று அதிகாரிகள் கொண்ட குழுவை நியமித்துள்ளது; அரசாங்கத் தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், பஸ் 'போக்குவரத்துத் துறை செயலாளர், ஆகியோர் அந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

அரசாங்கம் மேற்கொள்ள இருக்கும் பஸ் நிறுவனங்களின் அதிபர்களுடன் இந்த உயர் அதிகாரிகள் குழு பேச்சுவார்த்தை நடத்திவருகிறது; நட்ட ஈட்டுப் பிரச்சினையில் சிக்கல் ஏதும் வராது என்று நம்புகிறோம்.

பஸ் தொழிலாளர்கள் இலாகாவில் பணியாற்ற விரும்பினாலும் — அல்லது பஸ் கார்ப்பரேஷனில் சேர விரும்பினாலும் அதற்கு வழி செய்யப்படும்."

இலங்கைக்குத் தனித் தூதுவர்

அதிபர் யாகியா கான் அனுப்புவதன் நோக்கம் ?

கொழும்பு, நவ. 18—

கிழக்குப் பாகிஸ்தானின் 'உண்மை நிலை'யை எடுத்து விளக்க இலங்கைக்குத் தனித் தூதுவர் ஒருவரை அதிபர் யாகியா கான் அனுப்பியிருக்கிறாராம்.

கிழக்கு வங்கச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் இவர் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

'உளவாளிகளாலும்—நாசவேலைக்காரர்களாலும் ஏற்படக்கூடிய அபாயத்தை அரசு நன்கு உணர்ந்திருக்கிறது"

என்றும் அமைச்சர் குறிப்பிட்டுக் கூறினார்.

சிதம்பரம்-கடலூரில் குழாய்க் கிணறுகள்

ரூ. 320 இலட்சம் செலவாகும்

விவசாயிகளுக்குக் கடன் தர ஏற்பாடு

கடலூர், நவ. 19—

பூமிக்கடியிலுள்ள தண்ணீரைப் பாசனத்துக்குப் பயன்படுத்துவதற்கான திட்டங்கட்கு அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனம் தரும் கடனிலிருந்து தென் ஆற்காடு மாவட்டத்தில் சிதம்பரம், கடலூர் தாலுகாக்களில் 2,500 ஆழமான குழாய்க் கிணறுகளும், 500 சமுத்திரக் குழாய்க் கிணறுகளும் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்துக்கு ரூ. 320 இலட்சம் செலவாகும்; நில வளர்ச்சிப் பாங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு இத்தொகை கடனாகத் தரப்படும்.

"இத்திட்டம் முழுவதும் 1974 டிசம்பருக்குள் நிறைவேற்றப்பட வேண்டும்" என்று மாவட்டக் கலெக்டர் கே. ஏ. நம்பியார் கூறினார்.

"இதுவரையில் நில வளர்ச்சிப் பாங்கிகள் மூலம் ரூ. 129.41 இலட்சம் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றும் அவர் சொன்னார்.

அறிவு வளர்ச்சிக்குத் திரைப்படங்கள் ஆற்றும் பணி

தமிழக ஆளுநர் பாராட்டு

சென்னை, நவ. 16—

மக்களிடையே அறிவியல் வளர்ச்சிக்கும் — தகவல் அறிவுக்கும் செய்தித் தாள்களும், திரைப்படங்களும் ஆற்றிவரும் பணிகளைத் தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா பாராட்டிப் புகழ்ந்தார்.

"பேனா முனைகொண்டு பொது மக்களிடையே ஒரு கொள்கையை — ஒரு கருத்தை விளக்கி ஆழமாக நிலைபெறச் செய்ய முடியும்; திரைப்பட இசையும் — வசனங்களும் பொதுமக்களிடையே நேரிடையாகத் தொடர்பு கொண்டு அவர்களது உள்ளத்தைத் தொட்டு விஷயங்களை விளக்கி வைக்க மிகப்பெரும் சக்தி வாய்ந்த சாதனங்களாக இருக்கின்றன" என்று அவர் கூறினார்.

கலைவாணர் அரங்கில் திரு. கண்ணதாசன் கவிதைகள் வெளியீட்டு விழாவில் நூல்களை வெளியிட்டுப் பேசுகையிலேயே ஆளுநர் இவ்விதம் குறிப்பிட்டார்.

விழாவிற்குத் தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் தலைமை வகித்தார்.

திரை இசைப் பாடல்கள்— கண்ணதாசன் கவிதைகள்— ஞானமாலிகா ஆகிய மூன்று தொகுப்பு நூல்களும் வெளியிடப்பட்டன.

வானதி பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. ஏ. திருநாவுக்கரசு அனைவரையும் வரவேற்றார்.

நூலாசிரியரைப் பாராட்டி டாக்டர் எஸ். கே. நாயர், டாக்டர் எம். சுந்தரம், திருவாளர்கள் சாண்டில்யன், அழ. வள்ளியப்பா, எஸ். நல்லபெருமாள், அவ்வை நடராசன், டி. பி. பெருமாள, கவிஞர் சுரதா, திருமதி அரசு, மணிமேகலை மற்றும் பலர் பேசினர்.

பாராட்டுகளுக்கு திரு. கண்ணதாசன் நன்றி கூறினார்.

பின் தங்கிய பகுதிகளில் தொழிற்சாலைகள்

தொடங்குவோருக்கு மத்திய அரசு மானியம்

சென்னை, நவ. 18—

பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளத்தைப் பெருக்க மத்திய அரசு புதிய திட்டம் தயாரித்திருக்கிறது: இதன்படி, ஒவ்வொரு மாநிலத்திலும், 'பின்தங்கிய பகுதிகள்' என்று சில தாலுகாக்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தப் பகுதிகளில் தொழிற்சாலை தொடங்கினால் மொத்த முதலீட்டில் 10 சதவிகிதத்தை மத்திய அரசு மானியமாகத் தரும்.

தமிழ்நாட்டில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள இடங்கள் வருமாறு:—

இராமநாதபுரம் மாவட்டத்தில்— முதுகுளத்தூர், சிவகங்கை, பரமக்குடி, திருவாடானை, திருப்பத்தூர், இராமநாதபுரம் ஆகிய தாலுகாக்கள்.

மதுரை மாவட்டத்தில்—மேலூர் தாலுகா.

திருச்சி மாவட்டத்தில் — திருமயம், ஆலங்குடி, குளத்தூர் ஆகிய தாலுகாக்கள்.

மேற்கண்ட தாலுகாக்களில் புதிய தொழிற்சாலை தொடங்குகிறவர்கள், தமிழ்நாடு தொழில் துறை செயலாளருக்கு டிசம்பர் 31-ந் தேதிக்குள் மனுச் செய்ய வேண்டும்; அந்த மனுவை ஒரு குழு பரிசீலனை செய்து, முதலீட்டில் 10 சதவிகிதம் மானியமாக வழங்கும்.

துணைத் தலைமையமைச்சர் பதவி அவசியமா?

சீர்திருத்தக் குழு சிபாரிசை அரசு நிராகரித்துவிட்டது

புதுடில்லி, நவ. 19—

"துணைத் தலைமையமைச்சர் பதவியை ஏற்படுத்தலாம் என்று நிர்வாகச் சீர்திருத்தக் குழு தனது அறிக்கைகள் ஒன்றில் சிபாரிசு செய்திருக்கிறது; ஆனால் இந்தச் சிபாரிசை அரசு நிராகரித்துவிட்டது"

என்று மக்களவையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

"துணைத் தலைமையமைச்சர் பதவியை ஏற்படுத்தினால், தேவையற்றதோர் நிலையை அது ஏற்படுத்தும்" என்று அப்பதிலில் கூறப்பட்டது.

"முக்கிய நியமனங்களில், தலைமையமைச்சருக்குத் தொடர்ந்து தொடர்பு கொண்டிருக்கவேண்டும்" என்ற சிபாரிசை அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

"அமைச்சரவைக்குத் தலைமையமைச்சர் பொறுப்பாக இருப்பதோடு மட்டுமன்றி, பல்வேறு பணிகளுக்கும் அவர் வழிகாட்ட வேண்டும் — மேற்பார்வையிட வேண்டும்" என்று கமிஷன் தனது சிபாரிசில் கூறியிருக்கிறது.

இதற்கு அரசு தனது பதிலில், தலைமையமைச்சர் தனது நேரடிப் பொறுப்பில் எந்தத் துறையாவது இருக்கவேண்டுமா— அப்படியானால் எந்தெந்தத் துறைகள் இருக்கவேண்டும் என்பது பற்றித் தீர்மானிக்கும் பொறுப்பு அவரிடமே விடப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறது.

உரிமை கோரப்படாத பொருள்கள்

சென்னை காவல்துறை ஆணையாளர் அறிவிப்பு

சென்னை, நவ. 18—

சென்னை மாநகர் காவல்துறை ஆணையாளரின் அலுவலகத்தில் 30—9—71 வரை கிடைக்கப் பெற்றுள்ள — எவரும் உரிமைக் கோரப்படாத கைக் கடிகாரங்கள், சைக்கிள்கள், சிறு பெட்டிகள், பைகள், துணிகள் முதலிய பல பொருள்கள் இருக்கின்றன.

இவைகளின் உரிமையாளர்கள் 3—12—71-க்குள் எழுத்து மூலமாகக் கோராவிடில், அந்தத் தேதிக்குப் பிறகு அப்பொருள்கள் உரிய முறையில் 'டிஸ்போசல்' செய்யப்படும் எனச் சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளர் அறிவிக்கிறார்.

தமிழ்நாட்டில் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் உருவாகும்

திட்ட அறிக்கை தயாரிக்கக் குழு நியமனம்

பல்கலைக்கழக மானியக்குழுவின் ஒப்புதல் கிடைத்ததும் சட்டம் இயற்றுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ளும்

சென்னை, நவ. 19—

தமிழ்நாட்டில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைப்பது குறித்து நடைபெற்ற தொடக்கக் கட்ட ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஆறு பேர் அடங்கிய பணிக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இந்தக் குழுவின் சிபாரிசுகள் அடங்கிய அறிக்கை அடுத்த மாதத்திற்குள் (டிசம்பர்) கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பின்னர் இந்த அறிக்கை, பல்கலைக் கழக மானியக் கமிஷனின் பரிசீலனைக்கு மேல்நடவடிக்கைக்காகவும் — ஒப்புதலுக்காகவும் அனுப்பிவைக்கப்படும்.

தொழில் நுட்பத் துறையிலும்— ஆராய்ச்சித் துறையிலும் மாணவர்களிடம் மேம்பாடு காண்பதற்காக இந்தப் பல்கலைக் கழகத்தை அமைக்க வேண்டிய அவசியமும் அவசரமும் ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழக அமைப்புக்குப் பல்கலைக் கழக மானியக் குழுவின் ஒப்புதல் கிடைத்ததும், இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழக அமைப்புக்கான சட்டம் இயற்றுதல் உள்ளிட்ட தேவையான மேல் நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ளும்.

தமிழ்நாட்டில் தற்போது மொத்தம் எட்டு பொறியியல் (எஞ்சினீயரிங்) கல்லூரிகள் உள்ளன; இவற்றில் ஐந்து அரசாங்கத் தரப்பிலும் (திருச்சியில் மத்திய அரசின் நிர்வாகப் பொறுப்பின் கீழ் உள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரி உட்பட) மூன்று எஞ்சினீயரிங் கல்லூரிகள் தனியார் நிர்வாகப் பொறுப்பின் கீழும் உள்ளன.

சென்னை கிண்டி, கோவை, சேலம், காரைக்குடி ஆகிய ஊர்களில் உள்ள எஞ்சினீயரிங் கல்லூரிகள் மாநில அரசாங்கத்தின் கீழ் உள்ளன.

கோவையில் இரு எஞ்சினீயரிங் கல்லூரிகளும், மதுரையில் ஒன்றும் தனியார் துறையில் உள்ளன.

"தொழில் நுட்பப் பல்கலைக் கழக அமைப்புக்கான திட்ட அறிக்கை தயாரிக்கக் கீழ்க்கண்ட ஆறு நிபுணர்கள்கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கிறது" என்று தமிழக அரசின் கல்வித்துறைச் செயலாளர் திரவியம் நிருபர்களிடம் கூறினார் :—

ஜி. ஆர். தாமோதரன் (பி. எஸ். ஜி. கல்லூரி, கோவை).

பி. ஆர். இராமகிருஷ்ணன் (கோவை இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னலஜி).

மணி சுந்தரம் (திருச்சி வட்டார எஞ்சினீயரிங் கல்லூரி முதல்வர்).

கே. எஸ். ஹெக்டே (கோவை அரசினர் எஞ்சினீயரிங் கல்லூரி முதல்வர்).

வி. சி. குழந்தைவேலு (கிண்டி எஞ்சினீயரிங் கல்லூரி முதல்வர்).

பி. சிவலிங்கம் (தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்).

லாரி டயர்கள் பற்றுக்குறை

உரிமையாளர்கட்கு அமைச்சர் யோசனை

திருச்சி, நவ. 19...

"தமிழ்நாட்டில் லாரி டயர்கள் பற்றுக்குறையைத் தீர்க்க ஆவன செய்யப்படும்"

என்று வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் உறுதியளித்தார்.

கரூரில் நடந்த தமிழ்நாடு லாரி உரிமையாளர்கள் கழகத்தின் முதலாவது மாநாட்டில் அமைச்சர் பேசுகையில், 'டயர்களை வாங்க லாரி உரிமையாளர்கள் கூட்டுறவு ஒன்றை அமைத்துக் கொள்ளலாம்' என்று யோசனை கூறினார்.

மாநாட்டுக்குத் தலைமைவகித்த திரு. சின்னசாமி, டயர் பற்றுக்குறையினால் லாரி சொந்தக்காரர்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களை விளக்கினார்; 'மாநில அரசும் — மத்திய அரசும் உடனடியாகத் தலையிட்டு லாரி உரிமையாளர்களுக்குத் தேவையான டயர்கள் கிடைக்கச் செய்ய வழிகோல வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

தீவுத் திடலில் 3 கட்டடங்கள் கட்டத் திட்டமாம்

முதலமைச்சருக்குப் பாதுகாப்பு அமைச்சர் விளக்கியிருக்கிறாராம்

புதுடில்லி, நவ. 17—

"சென்னை நகரத்தில் 105 ஏக்கர் பரப்பளவு உள்ள தீவுத் திடலில், 55 ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு பகுதியில் மூன்று கட்டடங்களைக் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது; இந்த மூன்று திட்டங்களுக்கும்சுமார் ரூ. 53 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

"சென்னையிலுள்ள இராணுவப் பிரிவுகளுக்காக அலுவலகக் கட்டடமும், தங்குவதற்கான கட்டடங்களும் அமைக்கப்படும்.

"இந்தப் பிரச்சினை பற்றித் தமிழ்நாட்டு முதலமைச்சருக்கும்—பாதுகாப்பு அமைச்சருக்கும் இடையே கடிதப் போக்குவரத்து நடைபெற்றிருக்கிறது; பாதுகாப்பு அமைச்சர் முதலமைச்சருக்கு நிலைமையை விளக்கியிருக்கிறார்"

என்று நாடாளுமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் தெரிவித்திருக்கிறார்.

புதிய ரகப் பருத்தி — கோவில்பட்டி ஆய்வு நிலையம் கண்டுபிடிப்பு

அதிக அளவில் இழை தரக்கூடியதாம்

சென்னை, நவ. 16—

'தேசி' ரகப் பருத்தியில மிக அதிக அளவில் 1.08 வரை இழை தரக்கூடிய பருத்தியைக் கோவில்பட்டி ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்துள்ளது.

'இது ஒரு சிறந்த சாதனை' என்று கூறிய தமிழ்நாடு விவசாயக் கவுன்சில் செயலாளரான டாக்டர் எம். இராமச்சந்திரன், 'இந்த ரகம் பருத்தியில் 40-ம் கௌண்ட் நூல் வரை நூற்க முடியும்' என்றும் தெரிவித்தார்.

சென்ற வார இறுதியில் நடந்த கவுன்சில் கூட்டத்தில், இந்த ரகம் பருத்தி விதையை விடுவிக்கும்படி தமிழ்நாடு விதைக் குழுவுக்கு சிபாரிசு செய்யப்பட்டது.

'தேசி' ரகத்தில் அதிக விளைச்சல் தரும் மேற்கூறிய பருத்தியை மாநிலத்தில் 2.25 இலட்சம் ஹெக்டேரில் (ஹெக்டேர் சுமார் 2 50 ஏக்கர்) சாகுபடி செய்வதன் மூலம் கூடுதலாக 26,000 பேல் பருத்தி உற்பத்தி செய்ய முடியும் என்றும், இதனால் ஆண்டுக்கு ரூ. 2 கோடி வரை இலாபம் கிடைக்கலாம் என்றும் டாக்டர் இராமச்சந்திரன் தெரிவித்தார்.

'கருங்கண்ணி-8' என்ற இந்த ரகப் பருத்தியை வறட்சியான நிலத்தில் சாகுபடி செய்ய முடியும்; ஆந்திராவில் சாகுபடி செய்து பார்க்கப்பட்டதில், ஹெக்டேருக்கு 515 கிலோ வரை விளைச்சல் கிடைத்துள்ளது.

தற்போதுள்ள 'கே-7' என்ற ரகப் பருத்திக்குப் பதிலாக 'கருங்கண்ணி-8' சாகுபடி செய்யலாம் என்று இப்பொழுது சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

சமையல் எண்ணெய் உற்பத்திக்கான 'கே-1 சன் பிளவர்' என்ற இரஷ்ய ரக விதையைக் கோவில்பட்டி ஆராய்ச்சி நிலையம் சிபாரிசு செய்துள்ளது என்றும், 85 நாட்களில் பலன் தரக்கூடிய இந்த ரக விதை வறண்ட நிலத்தில் ஹெக்டேருக்கு 6 குவிண்டால் வரையிலும், பாசன வசதியுள்ள நிலத்தில் 20 குவிண்டால் வரையிலும் மகசூல் கிடைக்கக் கூடியது என்றும் இராமச்சந்திரன் தெரிவித்தார்.

45 நாட்களில் பலன் தரக்கூடிய 'எஸ்ஏ-2' என்ற புதுரக ஆமணக்கு விதையை சேலம் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்துள்ளது; மேலும் ஹெக்டேருக்கு 918 கிலோ வரை மகசூல் கிடைக்கக் கூடியதாகும். மழைக் குறைவாக உள்ள பகுதிகளிலும் இந்த ரகத்தைப் பயிரிட முடியும்.

மலேசியத் தமிழர்கள் வெளியேற்றப்படக் காரணம் என்ன ?

கோலாலம்பூர், நவ. 18—

சென்ற ஆண்டில் மலேசியா, 1,559 தென்னிந்தியத் தொழிலாளர்களைத் திருப்பி அனுப்பியது; 1969-ல் திருப்பி அனுப்பப்பட்டவர்களைப்போல் இது மும்மடங்காகும்.

தென்னிந்தியத் தொழிலாளர் நலப் போர்டின் ஆண்டு அறிக்கையில் இந்த விவரம் காணப்படுகிறது.

"மலேசியக் குடிமக்களுக்கு உத்தியோகங்களை ஒதுக்கி மலேசிய வேலை வாய்ப்புக் கட்டுப்பாட்டுச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதே, தமிழர்களின் வெளியேற்றம் அதிகரித்ததற்குக் காரணமாகும்" என்று அறிக்கை கூறுகிறது.

கடந்த ஆண்டில் இச்சட்டம் செயல்படுத்தப்படுவதற்கு முன்பு 440 இந்தியத் தொழிலாளர்கள்தான்—இவர்களில் பெரும்பாலோர் ரப்பர் தோட்டங்களில் பால் வெட்டுபவர்கள்—1969-ல் திருப்பி அனுப்பப்பட்டனர்.

புதிய கட்டடத்தால் மலேசியாவில் தென்னிந்தியத் தொழிலாளர்களிடையே வேலையின்மை அதிகரித்திருப்பதால், 55-வயதுக்கு மேற்பட்டவர்களை மட்டுமே திருப்பியனுப்புவது என்ற கட்டுப்பாட்டு நடைமுறையை நிறுத்திவைத்திருப்பதாகப் போர்டு கூறியது.

திருப்பி அனுப்பப்படுபவர்களில் பெரும்பாலோர் 55-வயதுக்குக் குறைவான வர்களே என்ற போதிலும், மனிதாபிமான காரணங்களால் அவர்களைத் திருப்பியனுப்ப முடிவு செய்யப்பட்டதாகப் போர்டு கூறியது.

எல்லையோர மக்கள் ஆயுதங்கள் வைத்திருக்க அனுமதிக்கப்படுவர்

புதுடில்லி, நவ. 18—

"நாட்டில் நெருக்கடி நிலை ஏற்படுமானால் எல்லையோரப் பகுதிகளில் வாழும் மக்கள் ஆயுதங்கள் வைத்திருக்க அனுமதிக்கப்படுவார்கள்"

என்று மக்களவையில் அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

அந்தமானில் கடற்படைத் தளம்

அமைக்கும் யோசனை கொள்கையளவில் ஏற்பு

புதுடில்லி, நவ. 19—

அந்தமானில் கடற்படைத் தளம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையை மத்திய அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட அக்குழுவின் அறிக்கையில், 'இந்தத் தீவுகளின் முக்கியத்துவத்தை அரசு முழுவதுமாக உணர்ந்திருக்கிறது' என்றும் குறிப்பிடுகிறது.

"இந்துமாக் கடலிலிருந்து பிரிட்டிஷ் கடற்படை திரும்பப் பெறப்படும் பின்னணியில், இந்தத் தீவுகளின் முக்கியத்துவம் கணிசமாக அதிகமாகி இருக்கிறது"

என்றும் மதிப்பீட்டுக் குழு சுட்டிக் காட்டியிருக்கிறது.

"அந்தமான் — நிக்கோபார் தீவுகளிலுள்ள சிறைச்சாலையையும், அங்குள்ள மத்திய கோபுரத்தையும் தேசிய நினைவுச் சின்னங்களாகக் காப்பாற்றி வர வேண்டும் என்ற குழுவின் யோசனையையும் அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

அரிசி — நெல் கடத்தல்

சோதனைச் சாவடிகள் மூலம் தடுக்கத் தீவிர நடவடிக்கை

தஞ்சை, நவ. 19—

தமிழ்நாட்டிலிருந்து அரிசி — நெல் ஆகியவை மற்ற மாநிலங்களுக்குக் கடத்தப்படாமல் தடுப்பதற்கு மாநில எல்லைப் பகுதிகளில் சோதனைச் சாவடி நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகவலை சிவில் சப்ளை கமிஷனர் இராமச்சந்தர் இங்கு தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது :—

"தஞ்சை மாவட்டத்தில் நெல் — அரிசி கொள்முதல்மீது 25 சதவிகித 'லெவி' முறையும், அவற்றின் நடமாட்டத்தின்மீது கட்டுப்பாடுகளும் மீண்டும் விதிக்கப்பட்டிருக்கிறது; சம்பா பருவத்திலும் இவை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

"இந்த 'லெவி' முறையின்கீழ் இதுவரை 6,000 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது."

அமைச்சரவை எண்ணிக்கைக்கு வரம்பு நிர்ணயம்

சட்டம் கொண்டுவர மத்திய அரசு திட்டம்

புதுடில்லி, நவ. 19—

கட்சி மாறல்கள் பற்றிய ஆய்வுக் குழுவின் தலைவரும் — உறுப்பினர்களும் தெரிவித்துள்ள திட்டத்தின்படி, 'அமைச்சரவையில் இவ்வளவு அமைச்சர்கள்தான் இருக்கலாம்' என்ற ஒரு வரம்பை நிர்ணயிப்பதற்கான சட்டம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு அரசு எண்ணியிருக்கிறது.

மக்களவையில், கேள்வி ஒன்றுக்கு எழுத்துமூலம் உள்துறை துணையமைச்சர் மோஹ்சின் அளித்த பதிலில் மேற்கூறிய தகவலைத் தெரிவித்தார்.

"மக்களவை மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் 11 சதவிகிதத்துக்குமேல் மத்திய அமைச்சரவை எண்ணிக்கை இருக்கக்கூடாது என்பதும், மாநிலங்கள் — மத்திய ஆட்சிப் பகுதிகளில் — மேலவையும் கொண்ட மாநிலமாக இருந்தால் சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையில் 10 சதவிகிதத்துக்கு மேலாகவும், மேலவை இல்லாத மாநிலமாக இருக்குமானால் 11 சதவிகிதத்துக்கு மேலாகவும் இருக்கக்கூடாது என்பதும் குழுவின் சிபாரிசு ஆகும்" என்று அவர் கூறினார்.

"சட்டமன்றத்தில் 100 உறுப்பினர்களுக்கும் குறைவாக உள்ள மாநிலமாக இருந்தால், அந்த எண்ணிக்கையில் 15 சதவிகிதத்துக்குமேல் அமைச்சர்கள் எண்ணிக்கை போகக் கூடாது என்பது சிபாரிசாகும்" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

வங்க அகதிகளுக்கு ரூ. 9 கோடி மதிப்புள்ள அரிசி

தாய்லாந்திடமிருந்து பிரிட்டன் வாங்கி அனுப்பும்

பாங்காக், நவ. 19—

"இந்தியாவுக்கு வந்துள்ள வங்காள தேச அகதிகளுக்காகக் கொடுப்பதற்காக ரூ. 9 கோடி பெறுமானமுள்ள அரிசியைப் பிரிட்டன் தாய்லாந்து நாட்டிடமிருந்து வாங்கத் திட்டமிட்டிருக்கிறது"

என்று, தாய்லாந்து பொருளாதார விவகார அமைச்சர் தெரிவித்தார்.

சென்னை நகருக்கு சுரங்க இரயில் பாதைத் திட்டம்?

சென்னை, நவ. 18—

சென்னை நகரத்துக்குச் சுரங்க இரயில் பாதை ஏற்றதா அல்லது நகர வட்ட இரயில் பாதை சரியானதா என்பதைப் பற்றி ஆராய்ந்தறிய மத்திய அரசு திட்டப் பொறியாளர் திரு. கோமளீசுவரனை அனுப்பியிருக்கிறது.

அவரது ஆய்வு அறிக்கையில் அடிப்படையில் சென்னை நகருக்கு ஏற்ற இரயில் பாதை பற்றி முடிவு செய்யப்படும்.

எஞ்சினீயர் திரு. கோமளீசுவரன் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களைச் சந்தித்துப் பேசினார்.

"இம்முடிவுப்படி அமையும் இரயில்பாதை, நகரின் போக்குவரத்து நெரிசலைச் சமாளிப்பதற்கு உதவும்" என்று அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்தார்.

இரயில்வேக்குப் பாதுகாப்பு

இராணுவத்திற்குக் கோரிக்கை

புதுடில்லி, நவ. 18—

"பாகிஸ்தான் நாசவேலைக்காரர்களால் இதுவரையில் இந்திய இரயில்வேக்கு ரூ 1 இலட்சத்திற்கு மேல் இழப்பு ஏற்பட்டிருக்கிறது"

என்று இந்திய அரசு வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பு ஒன்று கூறுகிறது.

ஜுன் மாதத் தொடக்கத்திலிருந்து இந்த ஆண்டு நவம்பர் 8-ந்தேதி வரையில் 12 இடங்களில் நாசவேலைகள் நடந்துள்ளன.

இரயில்களுக்கும்—இரயில் பாதைகளுக்கும் பாதுகாப்பு அளிக்க இராணுவத்தினரை அளித்து உதவும்படி பாதுகாப்புத் துறையை இரயில்வே அமைச்சர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

தங்கள் தங்கள் மாநிலத்திலுள்ள இரயில் சொத்துக்களைப் பாதுகாக்கத்தான் நடவடிக்கை எடுக்கும்படி அசாம், மேற்கு வங்கம், திரிபுரா மாநிலங்களின் முதலமைச்சர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

போலீசுத் துறையில் 'கம்பியூட்டர்'

இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படும்

குற்றவாளிகளின் அடையாளங்களைத் துல்லியமாகக் கணக்கிடத் திட்டம்

சென்னை, நவ. 18—

இந்தியாவிலேயே முதன் முதலாகப் போலீசுத் துறையில் 'கம்பியூட்டர்'களை (தானே கணக்கிடும் இயந்திரம்) பயன்படுத்தும் திட்டம் ஒன்றுக்குத் தமிழக அரசு அனுமதியளித்திருக்கிறது.

இந்த இயந்திரம், இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அலுவலகத்தில் நிறுவப்படும்.

இந்த இயந்திரத்தில் எல்லா வகையான குற்றங்கள்—குற்றவாளிகளுடையவும் புள்ளி விவரங்கள் துல்லியமாகக் கணக்கிட்டு வைத்திருக்கப்படும்.

சுமார் 4 இலட்சம் குற்றவாளிகளின் ரேகை அடையாளங்கள் சம்பந்தப்பட்ட புள்ளிவிவரங்களும் இதில் சம்பந்தப்பட்டிருக்கும்.

இந்தப் புள்ளிவிவரங்கள் அனைத்தையும் இந்த இயந்திரத்தின் கீழ் கொண்டுவர ஓராண்டுக் காலமாகும் என்று கருதப்படுகிறது.

1973-ம் ஆண்டில் இது இயங்கத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மருத்துவமனையிலிருந்து இன்று வெளியேறுகிறார் கலைஞர்

முழு நலம் பெற்றுப் பயணத்தைத் தொடருகிறார்

அமைச்சர்கள் அன்பில்தர்மலிங்கம்--இராசாராம் --கண்ணப்பன்--சென்னை மேயர் ஆகியோர் தொடர்புகொண்டு நலம் விசாரித்தனர்

கிணத்துக்கடவுத் தொகுதிக்குப் பரிசளிக்க லிங்கன் சிலை வாங்கி வருவதாக அறிவிப்பு

சென்னை, நவ. 19—

பொள்ளாச்சித் தொகுதி நாடாளுமன்ற இடைத் தேர்தலில் கழகத்திற்கு அதிகமான வாக்குகள் பெற்றுத் தந்த சட்டமன்றத் தொகுதிக்கு ஆபிரகாம் லிங்கன் சிலையை--லிங்கன் பிறந்த ஊருக்குச் சென்று வாங்கிவந்து அளிக்க விருப்பதாகத் தமிழக முதலமைச்சர் கலைஞர் கூறியுள்ளார்; அறநிலையத் துறை அமைச்சர் திரு. எம். கண்ணப்பன் அவர்கள் தொலைபேசியில் தொடர்புகொண்டபோது இதனைக் கலைஞர் கூறினார்.

நேற்று இரவு 7-மணியளவில் அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள், தொலைபேசி மூலம் கலைஞருடன் தொடர்புகொண்டு பேசினார்.

கண் சிகிச்சை முடிந்து நலமாக இருப்பதாகவும், நாளை மருத்துவமனையிலிருந்து வெளியேறி மேற்கொண்டு தமது அமெரிக்கப் பயணத்தைத் தொடர்ந்து முடித்துக்கொண்டு அடுத்த மாதம் முதல் வாரத்தில் தாயகம் திரும்புவதாகவும் முதல்வர் தெரிவித்தார்.

பொள்ளாச்சி நாடாளுமன்ற இடைத் தேர்தல் நடைபெற்றது குறித்தும்--தொகுதி வாரியாக வெற்றி பெற்ற கழக வேட்பாளர் திரு. மோகன்ராசு பெற்ற வாக்கு எண்ணிக்கை குறித்தும் கேட்டறிந்து, அமைச்சர் கண்ணப்பன் அவர்களின் சொந்தத் தொகுதியான கிணத்துக்கடவுத் தொகுதியில் கழகம் அதிகமான வாக்குகள் பெற்றதற்கு அமைச்சருக்குப் பாராட்டு தெரிவித்ததுடன், தேர்தலுக்குமுன் அறிவித்த வண்ணம் விடுதலை வீரன் ஆபிரகாம் லிங்கன் சிலையை அவர் பிறந்த ஊரிலேயே சென்று வாங்கி வந்து அமைச்சர் தொகுதிக்குப் பரிசளிக்க இருப்பதாகவும் கலைஞர் தெரிவித்தார்.

அடுத்து கலைஞர் அவர்கள், தருமபுரம் ஆதீனத்துக்கு திரு. சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் புதிய தலைவராகப் பொறுப்பேற்றமை குறித்துத் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டதுடன், திரு. சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் பொறுப்பேற்றுள்ள காலத்தில் திருக்கோவில்களில் தமிழ் வளர்க்கும் பணியிலும், நம் தமிழ் நாட்டு ஏழை எளியோருக்குத் திருக்கோவில்களின் மூலம் கல்வி--மருத்துவம் மற்றும் இயன்ற உதவிகள் அனைத்தையும் செய்துதர அனைத்து வகையிலும் அவரது பணி அமையுமெனத் தாம் நம்புவதாகவும் கூறி, புதிய பொறுப்பை ஏற்றிருக்கும் அவருக்குத் தம் இதயமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

அமைச்சர் இராசாராம்

பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் க. இராசாராம் அவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு முதல்வரின் உடல் நலம் பற்றி விசாரித்தார்.

இத்தொடர்புப் பேச்சு நன்கு நிமிடம்வரை நீடித்தது.

அதுபோது கலைஞர் தமது உடல் நிலை நன்குள்ளது என்றும், நாளை மருத்துவமனையிலிருந்து வெளியேறி சுற்றுப்பயணத்தை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

தமிழக அரசியல் நிலைமைகள் பற்றி அமைச்சர் க. இராசாராம் அவர்களிடம் கேட்டறிந்தார்.

அன்பில் தர்மலிங்கம்

முதல்வருடன் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும் நேற்று காலை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பேசினார்.

அதுபோது கலைஞருடன் இருக்கும் முரசொலி மாறன் எம்.பி., அமைச்சருடன் பேசினார்; முதல்வர் நலமுடன் இருப்பதாகவும், விரைவில் அவர் அமெரிக்கச் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளப்போவதாகவும் தெரிவித்தார்.

மேயர் சா. கணேசன்

சென்னை நகர மேயர் சா. கணேசன் அவர்களும் கலைஞருடன் தொடர்புகொண்டு பேசினார்.

முதல்வரின் உடல்நலம் பற்றி கேட்டார்; உடல் நலம் பெற்று விட்டதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

அடுத்து, சென்னை மாநகராட்சி மேயர்--துணை மேயர் தேர்தல் 29-ந் தேதி நடப்பது பற்றியும் மேயர் தெரிவித்தார்.

வெற்றிகரமாக கண் சிகிச்சை முடிந்து நலம் பெற்றுத் திரும்பும் சென்னை நகர மக்கள் சார்பில் வாழ்த்துக்களையும்--மகிழ்ச்சியையும் மேயர் தெரிவித்தார்.

நகர பஸ் 'ரூட்'டுகளைச் சீரமைக்கத் திட்டம்

பஸ்கட்டணத்தைக் குறைப்பதற்குப் புதிய ஏற்பாடு

அமைச்சர் ச. இராமச்சந்திரன் விளக்கம்

சென்னை, நவ. 19—

"சென்னை நகரில் பஸ் போக்குவரத்தைச் சீரமைப்பதன்மூலம் கூடுதலாக 200 பஸ்கள் கிடைக்கும்; இதன் மூலம் நகர பஸ் நெரிசலை பெரும் அளவுக்குச் சமாளிக்க முடியும்.

"சென்னை நகரிலிருந்து தாம்பரத்துக்கும் மற்றும் சுற்றுப்புற ஊர்களுக்கும் உள்ள பஸ் கட்டணத்தைக் குறைப்பதற்குப் புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன"

என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் கூறிய விளக்கமாவது :—

"அண்மையில் நான், 'நகர வழித் தடங்கள் (ரூட்கள்) சீரமைக்கப்படும்' என்று அறிவித்தேன்; ஆனால் சில பத்திரிகைகளில், 'நகர பஸ் கட்டணம் சீரமைக்கப்படும்' என்று நான் கூறியதாகச் செய்தி வெளியிட்டிருக்கின்றன; அது தவறு; நகர பஸ் 'ரூட்'டுகளைத்தான் சீரமைக்கப்போகிறோம்.

சென்னை நகரிலிருந்து ஆவடி—தாம்பரம் — பூவிருந்தவல்லி ஆகிய தொலைவிலுள்ள இடங்களுக்குத் தற்போது புறநகர் பஸ்கள் விடப்படுகின்றன; நகர எல்லையிலிருந்து 24 கிலோ மீட்டர் தூரம்வரை ஓடும் பஸ்களுக்குக் கிலோ மீட்டருக்கு இரண்டரைக் காசு வீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது; அதற்கு மேற்பட்ட தொலைவுக்குச் செல்லும் பஸ்களுக்குக் கிலோ மீட்டருக்கு 3 காசு வீதமும், குறைந்தபட்சக் கட்டணமாக 30 காசும் வசூலிக்கப்படுகிறது. இதனால் அண்மையில் செய்யப்பட்ட கட்டணச் சீரமைப்பு பெரிதும் பாதிக்கப்படுவதாக முறையீடுகள் வந்தன.

புதிய ஏற்பாடு விவரம்

புறநகர்ப் பகுதிகளில் (24 கிலோ மீட்டர் தொலைவு) மொத்தம் 120 பஸ்கள் தற்போது ஓடிக்கொண்டிருக்கின்றன; இந்தப் பஸ்கள் ஓடும் தூரத்தை இரண்டாகப் பிரித்துத் தனித் தனிப் பஸ்கள் விட்டுச் சீரமைப்புச் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது; உதாரணமாக, சென்னை நகரிலிருந்து நேரடியாகத் தாம்பரம் அல்லது ஆவடிக்குப் பஸ் விடுவதற்குப் பதிலாக, சென்னைக்கும்--சைதாப்பேட்டைக்குமிடையேயும், பிறகு சைதாப்பேட்டையிலிருந்து தாம்பரம் அல்லது ஆவடி வரை என்றும் தனித் தனியாகப் பிரித்துப் பஸ் விடுவதன் மூலம் போக்குவரத்து நெரிசல் குறையும்; விரைவில் உடனுக்குடன் பஸ் கிடைக்க வழி ஏற்படும்; கணிசமாகக் கட்டணச் சலுகையும் கிடைக்கும்.

இவ்வாறு இரண்டாகப் பிரித்துப் பஸ் விடுவதால், சென்னை—ஆவடி பஸ் பயணிகளுக்கு 15 காசு கட்டணம் குறையும்; சென்னை—தாம்பரத்திற்கும் இடையே 25 காசு கட்டணம் குறையும்.

200 கூடுதல் பஸ்கள்

அத்துடன், இந்தச் சீரமைப்பு நடவடிக்கையின் மூலம் கூடுதலாக 200 பஸ்கள் கிடைக்கும்; இந்தக் கூடுதல் பஸ்கள் அனைத்தும் சென்னை நகர பஸ் பயணிகள் தேவைக்காகத் திருப்பிவிடப்படுவதன் மூலம் நகரில் பஸ் நெருக்கடி பெரும் அளவுக்குக் குறையும்.

மேலும், சென்னைநகர பஸ் பயணிகளின் தேவைகளுக்காகப் புதிதாக 5 பஸ்கள் (நின்றுகொண்டு பயணம் செய்யும் 'ஸ்டாண்டி' பஸ்கள்) இன்னும் ஒரு வாரத்தில் விடப்படும்.

முதல் வகுப்புப் பஸ் விடப்படும்

அதிக வசதி--விரைவுப் பயணம் ஆகிய வசதிகளுடன் கூடிய முதல் வகுப்புப் பஸ் ஒன்றைச் சென்னை நகரில் பரிசோதனை மாக விடலாம் என்ற யோசனையும் உள்ளது.

போக்குவரத்துத் தேவை--மக்கள் நெரிசல் ஆகியவற்றைக் கண்டறிந்து தேவையான பஸ் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கத் தனிப் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்படும்.

23 எக்ஸ்பிரஸ் பஸ்கள்

குரோம்பேட்டையில் உள்ள அரசாங்கப் பஸ் கட்டும் தொழிற்சாலையில் நாளொன்றுக்கு ஒரு பஸ் வீதம் கட்டப்படுகிறது; இந்த வகையில், புதிதாக 23 எக்ஸ்பிரஸ் பஸ்கள் இந்த வார இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும்.

புதிய எக்ஸ்பிரஸ் பஸ்கள்

ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய எக்ஸ்பிரஸ் பஸ்களை மாற்றிப் புதிய பஸ்கள் விடும் திட்டத்தின்கீழ், இதுவரையில் சேலம்--கோவை மார்க்கங்களில் புதிதாக 15 எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடப்பட்டுள்ளன; டிசம்பர் மாதக் கடைசிக்குள் எல்லா எக்ஸ்பிரஸ் பஸ் மார்க்கங்களிலும் புதிய பஸ்கள் விடப்படும்.

பஸ் நிற்குமிடங்கள்

சென்னை நகரில் 50 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கெல்லாம் கட்டாயமாக பஸ் நிறுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது; இதனைச் செயல்படுத்த எல்லா ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும்.

குறிப்பிடத்தக்க மாறுதல்

நகர பஸ் போக்குவரத்து நிலைமையில் இரண்டே மாதங்களில் குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டு நிலைமை சீர்திருந்தும்."

கருநாடக மாநிலச் சட்டமன்றத் தேர்தல்

தலைமைக் கழக அறிவிப்பு

1972 பிப்ரவரித் திங்கள் வாக்கில் நடைபெறவிருக்கும் கருநாடக மாநிலச் சட்டமன்றத் தேர்தலில், வாய்ப்பு--வசதி உள்ள தொகுதிகளில் கழகச் சார்பாகப் போட்டியிடுவதற்கான முன்னேற்பாடுகளை, கருநாடக மாநில தி.மு.க. அமைப்புக் குழு மேற்கொள்வதற்குத் தலைமைக் கழகம் அனுமதியளித்துள்ளது என்பது இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

'அறிவகம்' சென்னை—13 } என். வி. நடராசன், துணைப் பொதுச்செயலாளர், தி.மு.க. (அமைப்பு)

வேளாண்மைத் துறை அமைச்சர்

அன்பில் தர்மலிங்கம் நிகழ்ச்சிகள்

நவ. 20 மாலை 3-மணி : விருத்தாசலம்—'முந்திரி நாள்' விழாவில் கலந்துகொள்ளல்.

கல்வி -- உள்ளாட்சித்துறை அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன் நிகழ்ச்சிகள்

நவ. 20 காலை 9-30 மணி : திருக்கண்ணபுரம் (மாயவரம்); மாலை 4-மணி : திருக்கண்ணபுரம் மருத்துவமனைத் திறப்பு; 5-மணி : திருக்கண்ணபுரம் உயர்நிலைப் பள்ளிக் கட்டட அடிக்கல் நாட்டு விழா; 6-30 மணி : பில்லாலி--பள்ளிக் கட்டடத் திறப்பு.

தமிழ் அறிஞர் 'கா.சு.' நினைவு விழா

நவ. 20, 21-ம் நாட்களில் நடைபெறும்

குழித்தலை, நவ. 19—

குழித்தலை தமிழ் 'கா.சு.' நினைவு இலக்கியக் குழுவின் சார்பில் வழக்கம்போல் இந்த ஆண்டும், தமிழறிஞர்--தாகூர் சட்டக் கல்லூரி பேராசிரியர்--பல்கலைப் புலவர் கா. சுப்பிரமணிய பிள்ளை நினைவு விழா, நவம்பர் 20, 21-ஆம் நாட்களில் கடம்பர் கோயில் பள்ளித் திடலில் சிறப்புடன் நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது.

இந்த விழாவில்--கவியரங்கம், பட்டிமன்றம், கருத்தரங்கம் ஆகிய நிகழ்ச்சிகளில் சென்னை மேயர் சா. கணேசன், தமிழ் வட்டத் தலைவர் வி. எஸ். சுப்பையா, கந்தசாமி நாயுடு கல்லூரி முதல்வர் மா. கி. தசரதன், பேராசிரியர்கள் கு திருமேனி, இரா. இராதாகிருட்டினன், சாமிமுத்து, ரம்போலா மாஸ்கரனேசு, நல். கணேசன், புஷ்பநாதன், புலவர்கள் சி. இராமசாமி தேசிகர், திருமாவளவனமதி, க. குருநாதன், தாமரைச்செல்வன், வை. கிருட்டினமூர்த்தி, இரா. தியாகராசன், எஸ் இராகவன், மா. கந்தசாமி எம்.எல்.ஏ., கு. வீ. முத்துசாமி, சுந்தரமூர்த்தி, அஜீஸ், சகுந்தலா பாய் ஆகியோர் பங்கு பெறுகின்றனர்; விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அமைப்பாளர் இளமுருகு பொற்செல்வி கேட்டுக்கொள்கிறார்.

விழா நிகழ்ச்சிகள் திருச்சி வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப்படும்.

போக்குவரத்துத்துறை அமைச்சர்

ச. இராமச்சந்திரன் நிகழ்ச்சிகள்

நவ. 20 பிற்பகல் 1-மணி : விருத்தாசலம்—'முந்திரி நாள்' விழாவில் கலந்துகொள்ளல்.

நவ. 21 காலை 8-15 மணி : பாவாண்டக்குண்டனூர் திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்ளல்; மதியம் 12 மணி : கவுந்தப்பாடி அரிசன குடியிருப்பு அடிக்கல் நாட்டு விழா; பிற்பகல் 12-30 மணி : குடும்ப நலக் கட்டுப்பாடு நிலையத் துவக்க விழா; 1-மணி : அய்யம்பாளையம் பள்ளிக் கட்டடத் திறப்பு; மாலை 4-மணி : காரட்டுப்பாளையம்—குடிநீர்த் தேக்கத் தொட்டி திறப்பு; 5-மணி : திப்பிச் செட்டிப்பாளையம்—கூட்டுறவுச் சங்கக் கட்டடத் திறப்பு; 6-மணி : கன்னடிபாளையம்—மேல்நிலை நீர்த் தொட்டி திறப்பு; இரவு 7-30 மணி : ஒலகடம்—தி. மு. கழகப் பொதுக்கூட்டம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று 'தி பீப்பிள்' என்ற வங்காள தேச வாரப் பத்திரிகை கூறுகிறது; அது மேலும் குறிப்பிட்டதாவது :—

"5 பிரிகேடியர்களின் தலைமையில் பல டிரக்குகளிலும் இராணுவத்தினர் வந்து இந்த 'மனித வேட்டை'யாடினர்கள்.

டாக்கா நகரிலும் நாராயண்கஞ்ச் நகரிலும் இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப் படையினர் வீரமாகப் போராடி வருகிறார்கள்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.